**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1664 - 2010 ජුලි මස 23 වැනි සිකුරාදා - 2010.07.23

*1664 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1230 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1239 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1241 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பதவிகள் - வெற்றிடம்

## கட்டுநாயக்க-சீதுவை நகர சபை

*பதவி - வெற்றிடங்கள்*

மேல் மாகாண அரச சேவையின் கட்டுநாயக்க - சீதுவை நகர சபையில் வெற்றிடங்களாயுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு உரிய தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பத்தைத் தயாரித்து பூர்த்திசெய்து "செயலாளர், கட்டுநாயக்க-சீதுவை பிரதேச சபை, சீதுவை" எனும் முகவரிக்கு 13.08.2010 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். (விண்ணப்பத்தைத் தாங்கியுள்ள கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியை குறிப்பிடுதல் வேண்டும்) பூர்த்தி பெறா விண்ணப்பங்கள் போன்றே விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| 3. பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| சுகாதார தொழிலாளர் வகுப்பு III | 03 | ரூபா 11,730-10 × 120-10×130-10×145-12×160 - ரூபா 17,600 | கல்வித் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |
| சாரதி II 'ஆ' | 01 | ரூபா 12,470 – 10 x 130 – 10 x 145 – 10 x 160 – 12 x 170 - ரூபா 18,860 | ஆகக்குறைந்தது தரம் 8/ஆண்டு 9 சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br>பிரத்தியேக/கூலிக்கு 24 அந்தரிற்கு குறையாத ஸ்ரேஷன் வெகன், முச்சக்கர வண்டி மற்றும் ரிரெக்ரர் ஓட்டும் சாரதியாக போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப் பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>சாரதியாக 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

4. **வயது எல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச/மாகாண அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

5. **பொதுத் தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகவும் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பதாரர் மேல் மாகாணத்தினுள் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்குக் குறையாமல் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும் (கட்டானை தேர்தல் தொகுதிக்குள் வசிப்போர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்) ;
(iv) தண்ட சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றினால் தண்டனைகள் பெற்றவராகவோ அல்லது அரச/மாகாண அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இல்லாதிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.**-

சுகாதார தொழிலாளர் - தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் சட்டப்படியான ஒரு நேர்முகப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

சாரதி II "ஆ" - திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர், போக்குவரத்து திணைக்களத்தின் பரீட்சிப்பவர் ஒருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அலுவலர் ஆகியோர் கொண்ட சபையினால் நடத்தப்படும் சாரதி நிபுணத்துவத்தை அளவிடும் பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியவுரித்துடையதுமாகும். புதிய நியமனங்கள் மூன்று வருட நன்னடத்தை காலப்பகுதிக்குட்பட்டதாகும்.

8. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் நிழற்பட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;

(iii) கல்விச் சான்றிதழ் ;

(iv) இற்றைவரை பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு (இவற்றில் ஒன்று பிரதேச கிராம அலுவலரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்).

9. இவ்விண்ணப்பத்தை கோரிய பின்னரோ அல்லது அதற்கிடையிலோ அல்லது சேர்த்துக் கொள்வதில் தாமதித்தலோ அல்லது மாற்றுதலோ அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தலோ கட்டுநாயக்க-சீதுவை நகர சபை செயலாளருக்கே அதிகாரம் உண்டு. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி எழுத்துமூலம் அறிவிக்கப்படும்.

டி. சீ. சோமசிறி,
செயலாளர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

2010, யூலை

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கட்டுநாயக்க-சீதுவை நகர சபை**

........................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. (அ) பிரத்தியேக முகவரி :-----.
   தொலைபேசி இலக்கம் :-----.
   (ஆ) அலுவலக முகவரி :-----.
   தொலைபேசி இலக்கம் :-----.
3. (i) பிறந்த திகதி :-----.
   (ii) 2009.12........ ஆந் திகதியன்று வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.
5. பால் (ஆண்/பெண்) :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
7. கல்வித் தகைமைகள் :-----.
8. தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம் :-----.
9. நீங்கள் இதற்கு முன்னர் அரச சேவையில் இருந்துள்ளீரா? ஆமெனில், விபரம் தருக :-----.

என்னால் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதியுரைக்கிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவையெனவும் பிழையானவையெனவும் காணப்படுமிடத்து இப்பதவிக்கு தகுதியற்றவனாவேனெனவும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி நான் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களம்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்நிறுவனத்தில் ........................................ பதவி வகிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................... இன் விண்ணப்பப்படிவமென சிபாரிசு செய்து, சமர்ப்பிக்கிறேன். அவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானதெனவும் ஒழுங்கீன நடவடிக்கை அற்றவரெனவும் அவ்வாறு நடப்பதற்கு எத்தனிக்காதவரென்றும் சான்றுபடுத்துகிறேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

.......................................................
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

7-571

## ஹோமாகம பிரதேச சபை

மேல் மாகாண சபை அரச சேவையில் உள்ள வெற்றிடம்

ஹோமாகம பிரதேச சபையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு மேல் மாகாண சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்படுகிறது.

(1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் மேல் மாகாண சபைக்குள் மூன்று வருடம் வசித்திருத்தல் வேண்டும். (தேர்தல் புத்தகத்தில் அல்லது பிரதேச சபை செயலாளரினால் வழங்கப்படும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
(3) விண்ணப்ப படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(4) நீதிமன்றத்தினால் குற்றம் புரிந்தவராக தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
(5) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், உடல் உள ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

| தொ. இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | ஆரம்ப சம்பளம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வீதி தொழிலாளி | 02 | ரூபா 11,730.00 | * 5 ஆம் தரம்/6 ஆம் தரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 2 | சுகாதார தொழிலாளி | 02 | ரூபா 11,730.00 | * கல்வித் தகைமை தேவையில்லை |
| 3 | சாரதி II "ஆ" | 01 | ரூபா 12,470.00 | * கல்வி நிருவாக ஜனரலினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>* தனியார்/வாடகை வாகனம் தார் நிறை ஹொண்டர் 24 இலும் குறைந்த வாகனம் ஓட்டுவதற்கு உரிய மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>* வாகனம் ஓட்டிய 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.<br>* பெருந்தெரு போக்குவரத்து வீதிகளை தெரிந்திருத்தல் வேண்டும்.<br>* ஆகக்குறைந்த உயரம் 5 அடி இருத்தல் வேண்டும்.<br>* இரவு வேளையிலும் பகல் வேளையிலும் வேலை செய்யக்கூடிய தேக ஆரோக்கியத்தை கொண்டிருத்த லுடன் நல்ல கண்பார்வை கொண்டிருத்தல் வேண்டும். |
| 4 | வருமான மேற்பார்வையாளர் | 01 | ரூபா 13,120.00 | * உயர்தர பரீட்சை அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சை இரண்டு தடவைக்கு மேற்படாமல் எண்கணித பாடத்திலும்/தூய கணித பாடத்திலும் சிங்களம்/தமிழ் மொழி உள்ளடங்கலாக 06 பாடங்களிலும் சாதாரண சித்தி பெற்றிருப்பதுடன் மேல் மாகாண சபையில் உள்ள மேல் மாகாண சபை காரியாலயத்தில் 05 வருடம் நிரந்தர சேவை புரிந்திருக்க வேண்டும்.<br>அல்லது<br>* உயர்தர பரீட்சையிலோ க. பொ. த. (சா.த) பரீட்சையிலோ 2 தடவைக்கு மேற்படாமல் எண்கணிதம்/தூயகணிதம் சிங்களம்/தமிழ் மொழியும் அடங்கலாக 05 பாடங்களில் திறமை சித்தி பெற்றிருத்தலுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 5 | காரியாலய தொழிலாளி | 01 | ரூபா 11,730.00 | * 8 ஆம் தரம்/ 9 ஆம் தரம் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். |

**தெரிவு செய்யப்படும் முறை :**

(1) நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும்.

(2) வருமான மேற்பார்வையாளர் பதவிக்கு பொது விவேகத்தை பரிசோதிப்பதற்கு 1 1/2 மணித்தியால வினாப்பத்திரமும் பொது அறிவு பரிசோதிப்பதற்கு 01 மணித்தியால வினாப்பத்திரமும் உண்டு.

(3) தேவையான தகைமையுடைய விண்ணப்பதாரிகளை மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

(4) ஹோமாகம பிரதேச சபையில் தற்பொழுது கருத்திட்டச் சேவையில் உள்ளவர்களை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடம் உள்ளவர்களை தெரிவு செய்வதில் விசேட கவனம் கொள்ளப்படும்.

**விண்ணப்ப படிவம் தயாரிக்கும் முறை :**

(1) விண்ணப்பதாரி இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை 'ஏ4' கடதாசியின் இரு புறமும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை ............................... திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு "செயலாளர்", ஹோமாகம பிரதேச சபை, ஹோமாகம என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திற்கு வந்து ஒப்படைக்க முடியும்.

(2) விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிடவும்.

(3) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்பும் சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்பாத விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) பிரதேச செயலாளரினால் உறுதி செய்யப்பட்ட வதிவிட சான்றிதழ் ;
(iv) அண்மையில் எடுக்கப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் இரண்டு (ஒன்று கிராம சேவையாளரிடம் பெற்றிருத்தல் வேண்டும்)
(v) அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள்.

செயலாளர்,
ஹோமாகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹோமாகம,
2010.07.06 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண சபை அரச சேவை ஹோமாகம பிரதேச சபை**

.......................... பதவி

1. முதலெழுத்துடன் பெயர் :-----.
முதலெழுத்து குறிக்கும் பெயர் :-----.

2. நிரந்தர முகவரி :-----.

3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

5. பிறந்த திகதி :- ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

6. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

7. பால் (ஆண்/பெண்) :-----.

8. திருமணமானவரா/திருமணமாகாதவரா? :----.

9. இலங்கைப் பிரஜா உரிமை பிறப்பினாலா/பதிவின் மூலமா? :----.

10. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்) :
க. பொ. த. தராதர (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் :-----. பரீட்சை சுட்டெண் :----.

| தொ. இல. | பாடம் | தரம் | தொ. இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

11. (i) வேறு கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (உயர் தரம்)
வருடம் :-----. பரீட்சை சுட்டெண் :----.

| தொ. இல. | பாடம் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

(ii) தொழில்சார் தகைமைகள் :-----.
(iii) வேறு தகைமைகள் :-----.

11. நீங்கள் தற்பொழுது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளீர்கள் எனின் :-
(i) தற்போது வகிக்கும் பதவி :----.
(ii) நிரந்தர/நாளாந்த/தற்காலிகமான/கொந்தரத்து/ :----.
(iii) சேவை நிரந்தரமாக்கப்பட்ட கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

12. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா ? :-----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்த அளவில் உண்மையானது பிழையற்றது என்பதை உறுதிமொழிகின்றேன். மேற்படி தகவல்கள் பொய்யானவை என கண்டறியப்படின் சேவையில் சேர்க்கப்படாமலும் சேவையிலிருக்கும் பொழுது எனின் எதுவித கொடுப்பனவும் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்பொழுது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் பொருட்டான திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ............................. இந்த திணைக்களத்தில் ........... என்னும் பதவியில் உள்ளார். இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரை சேவையில் விடுவிக்க முடியும்/முடியாது என்பதை தெரியப்படுத்துகிறேன். இவர் எந்த வித குற்றமும் புரியவில்லை தண்டிக்கப்படவில்லை என்பதை சான்றுப்படுத்தி இந்த விண்ணப்பத்தை அனுமதிக்கின்றேன்.

......................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திணைக்களம் :-----.
பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திகதி :-----.

7-708

**ஜா-எல நகர சபை**

*பதவி - வெற்றிடங்கள்*

ஜா-எல நகர சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வதிக்கும் ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | வீதிக் கங்காணி (கா.கா.சே.III) | 02 | பி.எல்.-1-2006A ரூ.11,730-10×120 – 10×130-10×145- -12×160-ரூபா 17,600 | குறைந்தபட்சம் 5 ஆம் தரத்தில் அல்லது 6 ஆம் ஆண்டில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |
| 02 | சுகாதாரத் தொழிலாளி (கா.கா.சே.III) | 03 | | கல்வித் தகைமை எதுவும் தேவையில்லை. |
| 03 | இலகு வாகனச் சாரதி II "ஆ" | 01 | பி.எல்.-3-2006A ரூ.12,470-10×130 – 10×145-10×160- -12×170-ரூபா 18,860 | (1) குறைந்தபட்சம் 8 ஆம் தரத்தில் அல்லது 9 ஆம் ஆண்டில் சித்தி.<br>(2) தனியார் வாடகை வாகனம் மற்றும் 24 அந்தருக்குக் குறைந்த பொதியற்ற எடைகொண்ட ஸ்டேஷன் வெகன் என்பவற்றைச் செலுத்த, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வழங்கிய அனுமதிப்பத்திரம். |
| 04 | விளையாட்டு மைதானப் பொறுப்பாளர் | 01 | பி.எல்.-1-2006A ரூ.11,730-10 × 120 – 10 × 130-10 × 145- -12 × 160-ரூபா 17,600 | குறைந்தபட்சம் 8 ஆம் தரத்தில் அல்லது 9 ஆம் ஆண்டில் சித்தியும், குறிப்பிட்ட துறையில் ஒரு வருடகால அனுபவமும் |

**ஆட்சேர்ப்பு முறை** :

1. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்பே வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

2. வாகனச் சாரதி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் நேர்முகப் பரீட்சையில் மட்டுமன்றி மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நடத்தப்படும் வாகன ஓட்டும் திறமை மதிப்பீட்டுப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும்.

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்** :

1. இப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய வசதி கொண்டவை.
2. தெரிவுசெய்யப்படுவோர் 03 வருடங்கள் தகுதிகாண் நிலையில் சேவையாற்ற வேண்டும்.
3. தகுதிகாண் காலத்தினுள் வரவு, வேலை, நடத்தை என்பன திருப்திகரமாக இருந்தால், இக்காலத்தின் முடிவில் சேவை நிரந்தரமாக்கப்படும்.
4. கனிஷ்ட தரத்திலுள்ளவர்கள் ஒரு வருடகால பதில் சேவை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
5. வாகனச் சாரதி பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவோர் வீதிப் போக்குவரத்து விதிகள் தொடர்பாக நடத்தப்படும் பரீட்சையிலும் மோட்டார் தொழில்நுட்பம் தொடர்பாக நடத்தப்படும் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அவ்வாறு, சித்தியடையத் தவறினால் வழமையான சம்பள அதிகரிப்புகள் தாமதிக்கப்படலாம்.

**பொது நிபந்தனைகள்** :

1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர ஊழியர்கள் விடயத்தில் வயதின் உச்சவரம்பு பொருந்தாது.)
3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய 03 வருட காலத்திற்கேனும் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும்.
4. தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு, தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது.

5. சிறந்த ஒழுக்கம் உடையவராகவும் நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.
6. ஜா-எல பிரதேசத்தில் வசிப்பதுடன், தற்போது இந்த நகர சபையில் சமயாசமய/தற்காலிக/பதிலாள்/ஒப்பந்த அடிப்படையில் அல்லது வேலைத்திட்டமொன்றின் கீழ் சேவையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு, பிரதேச செயலாளரின் அத்தாட்சிக் கையொப்பத்துடன் கிராம சேவை அலுவலரினால் வழங்கப்பட்ட கடிதம் ;
4. அண்மையில் பெறப்பட்ட 2 குணநலச் சான்றிதழ்கள் (அதிலொன்று கிராம சேவை அலுவலரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.)
5. ஏனைய தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை :**

1. இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக, 12" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 2010.09.30 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், நகர சபை, ஜா-எல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.
2. விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.
3. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.
4. நேரில் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
5. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பை தாமதிப்பதற்கு அல்லது அதனை மாற்றியமைப்பதற்கு அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அல்லது இதில் மாற்றங்களைச் செய்வதற்கு ஜா-எல நகர சபையின் செயலாளர் அதிகாரம் கொண்டுள்ளார்.

குறைந்தபட்ச தகைமைகளையாவது கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

ஆர். ஏ. கே. பி. விஜேசுந்தர,
பதில் செயலாளர்,
ஜா-எல நகர சபை.

ஜா-எல நகர சபை,
2010.07.08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஜா-எல நகர சபை**

............................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. தனிப்பட்ட முகவரி :-----.
3. பிறந்த திகதி :- ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
4. பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் காலம் ஆண்டுகள் :-
5. நீங்கள் இலங்கைப் பிரசையா? ஆமெனின், வம்சாவழிப் பிரசையா? பதிவுப் பிரசையா ? :-----.
6. ஆண்/பெண் :-----.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-----.
8. சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சை :-----.
9. ஏனைய கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :-----.
10. நீதிமன்றத்தினால் நீங்கள் தண்டிக்கப்பட்டதுண்டா? :-----.
11. அப்படியானால், எத்தகைய தண்டனை :-----.
12. தற்போது நகர சபையில் சேவையாற்றுபவரெனின், அது பற்றிய விபரங்கள் :-----.

இவ் விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பிழையானவை என்று நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், நான் தகைமையை இழப்பேன் என்பதையும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், எவ்வித இழப்பீடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

...................................... என்ற விண்ணப்பதாரர் தற்போது இத் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ....................................... என்ற பதவியில் சேவையாற்றுகிறார். அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாக்கப்படவில்லை என்பதை சான்றுப்படுத்துவதுடன் இவ் விண்ணப்பத்தை சிபாரிசுசெய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
நிறுவனம் :-----.
திகதி :-----.

7-745

---

**கம்பஹா மாநகர சபை**

சாரதி II "ஆ" தரம் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்

கம்பஹா மாநகர சபையில் சாரதி II "ஆ" தரம் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் ஆண் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி**.- மேல் மாகாண அரச சேவை சாரதி தரம் "ஆ" - II

2. **சம்பள அளவுத்திட்டம்**.- மாதாந்தம் - ரூபா 12,470 - 130 × 10 - 145 × 10 - 160 × 10 - 170 × 12 - 18,860 (ரூபா 12,800 க்கு முன்பு வினைத்திறன் தடை தாண்டல்).

3. **ஏனைய தகைமைகள்** :
(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாய் இருத்தல்
(ii) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று கம்பஹா மாநகர சபை எல்லை பிரதேசத்தில் குறைந்தது மூன்று வருட நிரந்தர பதிவை தொடர்ச்சியாக பெற்றிருத்தல்.
(iii) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித்தினத்தை உள்ளடக்கிய மாதத்திற்கு முன்னைய மாதத்தின் இறுதித் தினத்திற்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச மற்றும் மாகாண அரச சேவையில் சேவையாற்றுபவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.
(iv) கல்விப் பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் குறைந்த பட்சம் ஆண்டு 9/ தரம் 8 சித்தியடைந்திருத்தல்.
(v) தனிப்பட்ட/ வாடகை வண்டிகள் மற்றும் நிகர எடை 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேசன் வெகன் வண்டிகள் ஓட்டுவது தொடர்பாக வாகன போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட தேர்ச்சிப் பத்திரம் பெற்றிருத்தல்.
(vi) திணைக்கள பிரதிநிதி ஒருவரையும் பொலிஸ் வாகன போக்குவரத்து பிரிவு அதிகாரியொருவரையும் கொண்ட குழுவொன்றால் நடாத்தப்படும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை கணிப்பிடும் பரிசோதனைக்கு தோற்றி சித்தியடைதல் வேண்டும்.

4. **சேவையில் அமர்த்தல் தொடர்பான நிபந்தனைகள்** :
(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் கொண்டது ;
(ii) இந்நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது. கனிஷ்ட சேவையிலிருந்து உள் வாங்கப்படுபவர்கள் இப்பதவியில் ஒரு வருட காலம் பதில் கடமை பார்ப்பவர்களாக இருப்பார்கள். நியமனம் பெறும் ஒவ்வொருவரும் வினைத்திறன் தடை தாண்டலுக்கு அப்பால் செல்ல வேண்டுமாயின், அவர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும் :-

(அ) வீதி ஒழுங்கு விதிகள் சட்டக்கோவை தொடர்பான பரீட்சையொன்றுக்கு தோற்றி சித்தி பெறல்.

(ஆ) மோட்டார் இயந்திர விஞ்ஞானம் தொடர்பாக நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைதல். இப்பரீட்சை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தால் நடாத்தப்படும். பரீட்சையில் சித்திபெறாமை வருடாந்த சம்பள உயர்வு தாமதமாவதற்கு காரணமாக அமையும்.

(இ) தகுதிகாண் காலம் முடிவடைவதற்கு முன்பு உரிய வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். சட்டக்கோவையில் கூறப்பட்டுள்ள சட்டத்திட்டங்கள், மேல் மாகாண சபை நிதிப் பிரமாணங்கள் கட்டளைகள் மற்றும் மேல் மாகாண

அரச சேவை ஆணைக்குழுவால் காலத்திற்கு காலம் இடப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் சகல ஊழியர்களும் கட்டுப்படல் வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கேற்ப விண்ணப்பப் பத்திரத்தை தயாரித்து 2010.08.23 ஆந் தினத்திற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக "மாநகர ஆணையாளர் மாநகர சபை கம்பஹா" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சாரதி பதிவிற்கான விண்ணப்பம்" என்றும் குறிப்பிடவும்.

விண்ணப்பப்படிவத்துடன் உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஆவணங்களையும் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) பதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பம் இடப்படல் வேண்டும்.)
(v) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்நடத்தை சான்றிதழ் ;
(vi) வேறும், தகுதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(vii) சேவை அனுபவங்கள் தொடர்பான சான்றிதழ்கள்.

எச். ஆர். சிரிலால்,
மாநகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
கம்பஹா,
2010.7.9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கம்பஹா மாநகர சபை**

*மேல் மாகாண அரச சேவையில் கம்பஹா மாநகர சபையில் சாரதி II "ஆ" தரம் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்*

1. முதல் எழுத்துக்களுடன் பெயர்:----.
   முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் :----.
6. பிறந்த திகதி :
   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
7. இலங்கை பிரசை - பரம்பரை மூலமா? பதிவு மூலமா? :----.
8. கல்வித்தகைமை (சித்திபெற்ற பரீட்சை தொடர்பான விபரங்கள்) :----.
   சித்தி பெற்ற தரம்/ஆண்டு :----.
9. தொழிற் தகைமை :----.
11. சேவை அனுபவங்கள் :----.
12. நீங்கள் எப்போதாவது நீதிமன்றம் மூலமாக குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா? :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டிய வரையில் உண்மையானது எனவும் சரியானதும் எனவும் உறுதி கூறுகிறேன். இந் நியமனங்கள் தொடர்பான நிபந்தனைகளுக்கேற்ப என்னால் தரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னாயின் என்னை தகுதியற்றவனாக்குவதற்கும், நியமனத்திற்கு பின்பாயின் சேவையிலிருந்து நீக்குவதற்கும் ஆளாவேன் என்பதை அறிவேன்.

திகதி :----.

.....................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7-753/1

---

**கம்பஹா மாநகர சபை**

தொழிலாளி - தரம் III (சுகாதாரம்)

கம்பஹா மாநகர சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள மேற்படி பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமை.**- இப்பதவிக்காக கல்வித்தகைமைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

2. **ஏனைய தகைமைகள் :**
(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்.
(ii) சிறந்த நன்நடத்தை மற்றும் நல்ல தேகாரோக்கியம் உடையவராய் இருத்தல்.
(iii) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் தினத்தில் வயது 18 இற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல்.

*3.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியம் உடையது ;

(ii) புதிய நியமனங்கள் 3 வருட தகுதிகாண் காலத்தை உடையது.

(iii) சம்பள அளவுத்திட்டம் ரூபா 11,730 - 10 × 120 - 10 ×130- 10×145 - 12 × 160 - ரூபா 17,600.00 (மாதாந்தம்)

(iv) தகைமையுடையோர் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுவர்.

*4.* விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :

(i) பிறப்புச்சான்றிதழ் ;

(ii) கல்விச்சான்றிதழ்கள் ;

(iii) வதிவிடத்தை உறுதி செய்யும் சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் ;

(v) ஏனைய தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்கள்.

எச். ஆர். சிரிலால்,
மாநகர சபை ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
கம்பஹா,
2010.07.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கம்பஹா மாநகர சபை**

மேல் மாகாண அரச சேவையில் கம்பஹா மாநகர சபைக்கு சுகாதாரத் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்ளல் - 2010

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தேசிய அடையாள அட்டை இல. :----.

6. ஆண்/பெண் :----.

7. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

8. இலங்கை பிரசையாக இருப்பது - பரம்பரை மூலமா? பதிவு மூலமா? :----.

9. கல்வித்தகைமை :----. (சித்தியடைந்த பரீட்சை தொடர்பான விபரங்கள்) சித்தியடைந்த உயர் வகுப்பு/ஆண்டு :----.

10. தொழிற்தகைமை :----.சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

11. சேவை அனுபவங்கள் :----.

12. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டொன்றுக்காக நீதிமன்றமொன்றால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானது எனவும் சரியானதும் எனவும் உறுதி கூறுகிறேன். இந்நியமனம் தொடர்பான நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான அல்லது பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்படின், நியமனத்துக்கு முன்பாயின் தகுதியற்றவனாய் கணிப்பதற்கும், நியமனத்தின் பின்பாயின் வேலை நீக்கம் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை அறிவேன்.

திகதி :----.

.................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் இங்கே காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவமொன்றை தயாரித்து 2010.08.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக "மாநகர ஆணையாளர் மாநகர சபை கம்பஹா" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறித்தல் வேண்டும்.

7-753/2

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**காவத்தை பிரதேச சபை**

வரிப்பணம் விதிப்பு - 2010

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டுள்ள இவ்வரிப்பணமானது ஒவ்வொரு காலாண்டுகளிலும் சமனான நான்கு தவணைகளில் காவத்தை பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் என மேலும் அறியத்தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்கான முழு வரிப்பணத் தொகையும் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படும் பட்சத்தில் அம்முழு வரிபணத் தொகையில் நூற்றுக்கு பத்து (10%) வீத தள்ளுபடியும், மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் ஒவ்வொரு காலாண்டுகளுக்குமான வரிப்பணமானது அவ்வொவ் வொரு காலாண்டுக்குமுரிய முதல் மாத இறுதித்தினம் முடிவடைவதற்கு

முன் காவத்தை பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படுமாயின் நூற்றுக்கு ஐந்து (5%) வீத தள்ளுபடியும் வழங்கப்படும்.

பிரியந்த உபுல் ஹேவகே,
தலைவர்,
காவத்தை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காவத்தை,
2009.12.04.

### முன்வைக்கப்பட்ட யோசனை

1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆவது சரத்தின் (1) வது உப பிரிவில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில், பழைய காவத்தை சிறுநகர சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து வீடுகளில், கட்டடங்களில், காணிகள் மற்றும் பூமிகளின் 2003 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியானது 2010 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டு பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும்,

அப்பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆவது சரத்தின் (1) ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த பெறுமதியில் நூற்றுக்கு பத்து (10%) வீத வரிப்பணம் 2010 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவிடுவதற்கும் அத்துடன்,

இவ்வரிப்பணமானது பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆவது சரத்தின் (6) ஆவது உப பிரிவின் அதிகாரங்களின் கீழ் அவ்வாண்டு மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் நான்கு காலாண்டுகளிலும் சமனான நான்கு தவணைகளில் செலுத்துவதற்கு கட்டளையிடுவதற்கும் காவத்தை பிரதேச சபை யோசனையை முன்வைக்கின்றது.

7-566/2

---

### வெருகல் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசச் சட்டம்

#### குத்தகையும் உரிமக் கட்டணமும் - 2010

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1594 ஆம் இலக்க 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் நானாவித அறிவித்தல் பக்கம் 418 தொடக்கம் 424 வரை உப பிரிவு I தொடக்கம் உப பிரிவு VII வரை பிரசுரிக்கப்பட்ட கட்டணங்களை 2010, சனவரி 1 ஆந் திகதியில் இருந்து தொடர்ந்து அறவிடுவது என 16.04.2010 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் 12 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ச. சவுந்தரராசா,
தலைவர்,
வெருகல் பிரதேச சபை.

7-576

---

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

இலங்கை அரச சட்ட வரைபின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 37 (1) "ஆ" பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

இலங்கை அரச சட்ட வரைபின் 252 ஆவது அத்தியாயத்தின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37(1) "ஆ" பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் வகையில் வீதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு உரித்தானது என தங்களுக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

தற்பொழுது மாநகர சபையினால் அளக்கப்பட்டு குறியீடு இடப்பட்ட வீதிகள் தொடர்பாக இடத்தின் உரிமையாளர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவித்தல் விடுக்கப்பட்டு ஒரு மாத காலத்துள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கின்றேன்.

சாந்தா பி. லியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,
2010.

| தொடர் இல. | வீதியின் பெயர் | எல்லை (தொடக்கம் -வரை) | நீளம் (அடி) | அகலம் (அடி) |
|---|---|---|---|---|
| 01 | ஜயவீர மாவத்தையின் கிளை வீதி உட்செல்லும் சுற்றுவட்டம் | வரி இல. 6 தொடக்கம் 26/21 வரை | 287' | 12' |

7-626

---

### கம்பஹா மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதி கட்டளைச் சட்டம்

#### 1987ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களியாட்ட விடுதி அனுமதிப்பத்திரம் வழங்கல் (திருத்தச்) சட்டமூலம்

கீழே குறிப்பிடப்பட்ட பெயருடையவரால் அவருடைய பெயருக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள களியாட்ட விடுதியை குறிப்பிட்ட முகவரியில் நடாத்திச் செல்வதற்கு 2010 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக என்னிடத்தில் விண்ணப்பித்துள்ளார் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதி கட்டளைச்சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களியாட்ட விடுதிகளுக்கு அனுமதி வழங்கல் (திருத்த) சட்டமூலத்தின் 6 ஆம் சரத்திற்கேற்ப பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

இக்களியாட்ட விடுதிக்கு அருகில் வசிக்கும் பொது மக்கள் எவரேனும் இக்களியாட்ட விடுதிக்கு அனுமதி வழங்கல் தொடர்பில் ஆட்சேபனைகள், எதிர்ப்புகள் தெரிவிக்க விரும்பின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்து நான்கு வாரங்களுக்குள் தமது எதிர்ப்புக்கான காரணங்களை எழுத்துமூலமாக இரண்டு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

எச். ஆர். சிரிலால்,
மாநகர சபை ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களியாட்ட விடுதியின் செயலாளரா/ முகாமையாளரா/ தலைவரா என்பது | களியாட்ட விடுதியின் பெயர் | களியாட்ட விடுதி நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கும் இடம் |
|---|---|---|---|
| திரு. விமல் கமகே சாந்தி வீதி கம்பஹா | செயலாளர் | கம்பஹா விளையாட்டு கழக விடுதி | 15/02/01 மங்கள வீதி, கம்பஹா |

7-629

# நானாவித அறிவித்தல்கள்

## காவத்தை பிரதேச சபை

ஏக்கர் வரி விதிப்பு - 2010

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டுள்ள இவ் ஏக்கர் வரி, ஒவ்வொரு காலாண்டுகளிலும் சமனான நான்கு தவணைகளில் காவத்தை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என மேலும் அறியத்தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்கான முழு ஏக்கர் வரியும் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படும் பட்சத்தில் அம்முழு ஏக்கர் வரித்தொகையில் நூற்றுக்கு பத்து (10%) வீத தள்ளுபடியும், மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவுறும் ஒவ்வொரு காலாண்டுகளுக்குமான ஏக்கர் வரியானது அவ்வொவ்வொரு காலாண்டுக்குமுரிய முதல் மாத இறுதித்தினம் முடிவடைவதற்கு முன் காவத்தை பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படுமாயின் நூற்றுக்கு ஐந்து (5%) வீத தள்ளுபடியும் வழங்கப்படும்.

பிரியந்த உபுல் ஹேவகே,
தலைவர்,
காவத்தை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காவத்தை,
2009.12.04.

## முன்வைக்கப்பட்ட பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது சரத்தின் (3) வது உப பிரிவில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதும், மேல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 135 ஆவது சரத்தின் வரையறைப்படி ஏக்கர் வரியிலிருந்து விலக்களிக்கப்படாததும், நிலையான அல்லது சட்டப்படி விவசாயத்தின்கீழ் உள்ள-

(அ) ஹெக்டயர் 5 அல்லது அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு காணிக்கும், அக்காணியின் ஒவ்வொரு ஹெக்டயருக்கும் 2010 ஆம் ஆண்டுக்காக ரூபா 10 படி ஆண்டுக்கான ஏக்கர் வரி விதித்து அறவிடுவதற்கும் ;

(ஆ) மேல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் 134 ஆவது சரத்தின் (3) ஆவது உப பிரிவின் இடைகால கட்டளைகளின் கீழ் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் காவத்தை பிரதேச சபை பிரிவானது, விசேட பிரதேசமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (ஆ) பிரிவில் 1989.02.03 ஆந் திகதி வெளியான அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருப்பதால் ஒரு ஹெக்டயருக்கு மேல் ஆனால் ஐந்து ஹெக்டயருக்கு குறைவான ஒவ்வொரு காணிக்கும் 2010 ஆம் ஆண்டுக்காக ரூபா 10 படி ஆண்டுக்கான ஏக்கர் வரி விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும் ; அத்துடன்

(இ) பிரதேச சபை சட்டத்தின் 134 ஆவது சரத்தின் (6) ஆவது உப பிரிவின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவ்வாண்டு மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 அத்துடன் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுக்கு முன் சமனான நான்கு தவணைகளில் செலுத்துவதற்கு கட்டளையிட வேண்டுமென காவத்தை பிரதேச சபை யோசனையை முன்வைக்கின்றது.

7-566/1

**காவத்தை பிரதேச சபை**

வியாபார வரி விதிப்பு – 2010

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டுள்ள இவ்வியாபார வரியானது, அவ்வாண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் காவத்தை பிரதேச சபைக்குச் செலுத்தப்படவேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

பிரியந்த உபுல் ஹேவகே,
தலைவர்,
காவத்தை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காவத்தை,
2009.12.04.

**முன்வைக்கப்பட்ட பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆவது சரத்தின் (1) ஆவது உப பிரிவில், பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சரத்தின் அல்லது அச்சரத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது ஒரு இடைக்கால யாப்பின் சட்டதிட்டங்களின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் அல்லது அச்சட்டத்தின் 150 ஆவது சரத்தின் கீழ் கைத்தொழில் வரி செலுத்த அவசியமில்லாததும் அத்துடன் தொழில் அல்லாததுமான ஏதாவது ஒரு வியாபாரம் ; காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு நடாத்திச் செல்லும் ஒவ்வொரு நபரும், அவ்வியாபாரத்தின் அதற்கு முந்திய ஆண்டின் திரட்டானது இங்க கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் (I) வது நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயத்தின் வரையறைக்கு உட்பட்டுக் காணப்படுமாயின் (II) ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு வியாபார வரியானது 2010 ஆம் ஆண்டுக்கு விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும், அவ்வரிக்கு உட்படும் எந்தவொரு நபரும் அவ்வியாபார வரியை 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் காவத்தை பிரதேச சபைக்குச் செலுத்தப்படவேண்டுமென காவத்தை பிரதேச சபை யோசனையை முன்வைக்கின்றது.

**அட்டவணை**

| | நிரல் I<br>வரிக்குரிய ஆண்டுக்கு முந்திய ஆண்டில் வியாபாரத்தில் திரட்டப்பட்ட பெறுவனவுகள் | நிரல் II<br>செலுத்த வேண்டிய வரி<br>ரூபா ச |
|---|---|---|
| 01. | ரூபா 6,000 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | இல்லை |
| 02. | ரூபா 6,000 க்கு மேற்பட்டதும் ரூபா 12,000 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 90 0 |
| 03. | ரூபா 12,000 க்கு மேற்பட்டதும் ரூபா 18,750 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 180 0 |
| 04. | ரூபா 18,750 க்கு மேற்பட்டதும் ரூபா 75,000 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 360 0 |
| 05. | ரூபா 75,000 க்கு மேற்பட்டதும் ரூபா 150,000 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 1,200 0 |
| 06. | ரூபா 150,000 க்கு மேற்படுகின்ற சந்தர்ப்பம் | 3,000 0 |

7-566/3

---

**காவத்தை பிரதேச சபை**

வாகன மற்றும் மிருகங்கள் தொடர்பான வரி விதிப்பு – 2010

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இவ்வரிக்கு உட்படும் எந்தவொரு வாகனத்தை அல்லது மிருகத்தை வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும் அவ்வாகனம் அல்லது மிருகம் தனது பொறுப்பின்கீழ் வைத்திருக்கும் நாட்களின் எண்ணிக்கை முப்பது நாட்களாக முடிவடைந்தவுடன் 2010 ஆம் ஆண்டுக்கான இவ்வரியை காவத்தை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

பிரியந்த உபுல் ஹேவகே,
தலைவர்,
காவத்தை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காவத்தை,
2009.12.04.

**முன்வைக்கப்பட்ட பிரேரணை**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது சரத்துடன் இணைத்து குறிப்பிடப்பட்டுள்ள இச்சட்டத்தின் 148 ஆவது சரமும் நான்காவது அட்டவணையின் பிரமாணங்களின்படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு கீழ் உள்ள அட்டவணையின் (1) ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகம் தமது பொறுப்பில் வைத்திருக்கும் ஒவ்வொரு நபர் மீதும், அவ்வட்டவணையின் II ஆவது நிரலில் குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ள வரியை 2010 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவீடு செய்யும் யோசனையை பிரதேச சபை முன்வைக்கின்றது.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II<br>ரூபா ச. |
|---|---|
| (1) (I) மோட்டார் வண்டி, மூன்று சில்லு மோட்டார் வண்டி, மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள், வண்டி, ஜின் ரிக்ஷா, சைக்கிள் அல்லது மூன்று சில்லு சைக்கிள் வண்டி அல்லாத ஒவ்வொரு வாகனத்திற்கும் | 25.00 |
| (II) ஒவ்வொரு சைக்கிள் அல்லது மூன்று சில்லு சைக்கிள் அல்லது சைக்கிள் கார் அல்லது சைக்கிள் தள்ளுவண்டிகளுக்கும் | |
| (அ) வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் போது | 18.00 |
| (ஆ) வியாபாரம் அல்லாத நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் போது | 4.00 |
| (III) ஒவ்வொரு வண்டிலுக்கும் | 20.00 |
| (IV) ஒவ்வொரு தள்ளுவண்டிக்கும் | 10.00 |
| (V) ஒவ்வொரு ரிக்ஷாவுக்கும் | 7.50 |
| (VI) ஒவ்வொரு குதிரை, செம்மறி ஆட்டுக்கும் | 15.00 |
| (VII) ஒவ்வொரு யானைக்கும் | 50.00 |

(2) 26 அங்குல விட்டத்திற்கு மேற்படாத சில்லுகளைக்கொண்ட சிறுவர் வாகனம், வீல்பரோ அவ்வப்போது பொது இடங்களில் மாத்திரம் வியாபார நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள் அத்துடன் வியாபார நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத தள்ளுவண்டிகளுக்கும் மேற்கூறப்பட்ட வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

07-566/4

---

**காவத்தை பிரதேச சபை**

கைத்தொழில் வரிவிதிப்பு - 2010

ஏதாவது கைத்தொழில் ஒன்றை நடாத்திச் செல்வதன் நிமித்தம் இடைக்கால யாப்பின்கீழ் 2010 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின்மீது கட்டண விதிப்பு - 2010

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

*2010 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டுள்ள இக்கைத்தொழில் வரியானது அவ்வாண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் காவத்தை பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தப்படவேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.*

*பிரியந்த உபுல் ஹேவகே,*
*தலைவர்,*
*காவத்தை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*காவத்தை,*
*2009.12.04.*

**முன்வைக்கப்பட்ட பிரேரணை**

*1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆவது சரத்தின் (1) ஆவது உப பிரிவில், பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்றதும், கீழுள்ள அட்டவணையின் (I) ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலுக்காகவும் அவ் அட்டவணையில் (II) ஆவது நிரலில் ஒவ்வொரு கைத்தொழிலும் நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்தின் வருட மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு கைத்தொழில் வரியானது 2010 ஆம் ஆண்டுக்காக விதித்து அறவிடுவதற்கும், அக்கைத்தொழில் வரிக்கு உட்படும் நபர் 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வரியை காவத்தை பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டும் என காவத்தை பிரதேச சபை யோசனையை முன்வைக்கின்றது.*

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடரி லக்கம் | கைத்தொழில் வரி | இடத்தின் வருட மதிப்பீட்டு பெறுமதி (ரூபா) | | |
| | | 750 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 750 க்கு மேல் 1,500க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 1,500 க்கு மேற்படுகின்ற சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1 | புடவைகள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2 | சீமெந்து பொருட்கள் உற்பத்தி | 450 0 | 600 0 | 1,000 0 |
| 3 | தச்சுத் தொழில் | 450 0 | 600 0 | 1,000 0 |
| 4 | வீட்டுப் பாவனை பொருட்கள் உற்பத்தி | 450 0 | 600 0 | 1,000 0 |
| 5 | வீட்டுப் பாவனை பொருட்கள் உற்பத்தி/வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | நகை உற்பத்தி அல்லது வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7 | ஜோதிடச் சேவைகள் | 450 0 | 600 0 | 1,000 0 |
| 8 | நிறப்பூச்சு வகைகள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9 | காய்ச்சி ஒட்டுதல் | 450 0 | 600 0 | 1,000 0 |
| 10 | சுண்ணாம்பு பதனிடுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | கட்டடப் பொருட்கள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | தின்பண்டங்கள் உற்பத்தி அல்லது வியாபாரம் | 350 0 | 550 0 | 1,000 0 |
| 13 | குளிரூட்டப்பட்ட இறைச்சி/மீன் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | மிருகத்தீனி உற்பத்தி | 350 0 | 550 0 | 1,000 0 |
| 15 | மின் உபகரணங்கள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16 | அப்பியாசக் கொப்பி, புத்தகங்கள், காகிதாதிகள் வியாபாரம் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 17 | ஆங்கில மருந்துகள் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18 | ஆயுர்வேத மருந்து பொருட்கள் வியாபாரம் | 350 0 | 550 0 | 1,000 0 |
| 19 | பல்கட்டும் நிலையம் நடாத்திச் செல்லுதல் | 450 0 | 650 0 | 900 0 |
| 20 | மூக்குக்கண்ணாடி விற்பனை | 450 0 | 700 0 | 1,000 0 |
| 21 | ஒலிப்பதிவு நாடா, இருவெட்டுக்கள் வியாபாரம் அல்லது வாடகைக்கு விடுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22 | செங்கல், ஓடு உற்பத்தி அல்லது விற்பனை | 350 0 | 550 0 | 1,000 0 |
| 23 | அலங்கார பொருட்கள் உற்பத்தி அல்லது விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24 | பலசரக்கு பொருட்கள்/கசாயப்பொருட்கள்/மருந்து வகைகள் பக்கட் பண்ணுதல் | 350 0 | 550 0 | 800 0 |

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடரி லக்கம் | கைத்தொழில் வரி | இடத்தின் வருட மதிப்பீட்டு பெறுமதி (ரூபா) | | |
| | | 750 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 750 க்கு மேல் 1,500க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 1,500 க்கு மேற்படுகின்ற சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 25 | பழங்கள் விற்பனை | 350 0 | 650 0 | 1,000 0 |
| 26 | உணவு பொருட்கள்/பலசரக்கு பொருட்கள் விற்பனை செய்தல் | 400 0 | 700 0 | 1,000 0 |
| 27 | குரோசரி விற்பனை நிலையம் நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28 | சிகையலங்காரம் செய்யும் இடம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29 | சில்லறை வியாபாரம் | 450 0 | 750 0 | 1,000 0 |
| 30 | வெற்றிலை, புகையிலை வியாபாரம் | 350 0 | 550 0 | 800 0 |
| 31 | வெற்றிலைச் சுருள் விற்பனை | 350 0 | 550 0 | 800 0 |
| 32 | செயற்கை பசளைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34 | படங்கள் பிரேம் பண்ணல் | 450 0 | 650 0 | 1,000 0 |
| 35 | மோட்டார் சைக்கிள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36 | சைக்கிள் விற்பனை | 450 0 | 650 0 | 1,000 0 |
| 37 | கடைப்பொருட்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38 | பாணி/கருப்பட்டி உற்பத்தியும் விற்பனையும் | 350 0 | 650 0 | 850 0 |
| 39 | ஐஸ்கிறீம்/ஐஸ்பக்கட்/யோர்கட் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40 | மிருக உணவுகள் விற்பனை செய்தல் | 350 0 | 550 0 | 850 0 |
| 41 | சரக்குகள் களஞ்சியமும் விற்பனையும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42 | பாதணிகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43 | பாதணி திருத்துதலும் உற்பத்தி செய்தலும் | 350 0 | 600 0 | 900 0 |
| 44 | சிறு ஏற்றுமதி பொருட்களின் கொள்வனவும் விற்பனையும் | 450 0 | 600 0 | 1,000 0 |
| 45 | இரத்தினக்கல் வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46 | இறப்பர் விலைக்கு வாங்குதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47 | தைத்த ஆடைகள் விற்பனை | 450 0 | 700 0 | 1,000 0 |
| 48 | சிகரட் மொத்த வியாபாரம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49 | கள்ளு சேகரிக்கும் நிலையம் | 450 0 | 650 0 | 900 0 |
| 50 | உள்ளூர் மற்றும் வெளியூர் மதுபானங்களின் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51 | தேங்காய் களஞ்சியப்படுத்தலும் விற்பனையும் | 350 0 | 550 0 | 850 0 |
| 52 | கருவா கொள்வனவு செய்யும் இடம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53 | விவசாய இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தலும் விற்பனையும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54 | மட்பாண்ட பொருட்களின் உற்பத்தியும் விற்பனையும் | 350 0 | 550 0 | 800 0 |
| 55 | குளிர்பான நிலையம் நடாத்திச்செல்லல் | 450 0 | 550 0 | 900 0 |
| 56 | வளர்ப்புமீன்/மிருகங்கள்/பூக்கள் விற்பனை செய்தல் | 350 0 | 600 0 | 850 0 |
| 57 | மரக்கன்றுகள் வளர்க்கும் நாற்று மேடைகள் நடாத்திச்செல்லல் | 350 0 | 500 0 | 950 0 |
| 58 | தேயிலைத் தூள் விற்பனை | 350 0 | 550 0 | 900 0 |
| 59 | பிளாஸ்டிக்/அலுமினியப் பொருட்களின் விற்பனை | 450 0 | 650 0 | 1,000 0 |
| 60 | செயற்கை பூக்கள் உற்பத்தியும் விற்பனையும் | 450 0 | 650 0 | 1,000 0 |
| 61 | தெம்பிளி/இளநீர் விற்பனை | 350 0 | - | - |
| 62 | தொலைக்காட்சி அன்டனா உற்பத்தி/விற்பனை | 350 0 | 550 0 | 800 0 |
| 63 | காணிபூமிகள் விற்பனை செய்யும் இடத்தினை நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64 | லெமினேடிங்/பொட்டோகிரபிக் இடத்திற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 65 | ஒலிபெருக்கி கருவிகள் வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66 | அதிஷ்ட இலாப சீட்டுக்கள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67 | சுற்றுலா வர்த்தகம் | 450 0 | - | - |
| 68 | தனியார் வாரச்சந்தை நடாத்திச் செல்லல் | - | 750 0 | 1,000 0 |
| 69 | தானிய விதைகள் வகை பக்கட் செய்தல் | 350 0 | 600 0 | 800 0 |
| 70 | கல் அல்லது கற்களால் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை | 350 0 | 500 0 | 800 0 |
| 71 | தேயிலைப்பெட்டி அல்லது பலகைப் பெட்டிகள் உற்பத்தி | 400 0 | 550 0 | 850 0 |
| 72 | தேயிலைக் கன்றுகள் வளர்ப்பு நாற்று மேடைகளுக்கு | - | 750 0 | 1,000 0 |
| 73 | கடித உறை அல்லது வேறு காகித உறைகள் தயாரிப்பு | 350 0 | 550 0 | 850 0 |

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடரி லக்கம் | கைத்தொழில் வரி | இடத்தின் வருட மதிப்பீட்டு பெறுமதி (ரூபா) | | |
| | | 750 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 750 க்கு மேல் 1,500க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 1,500 க்கு மேற்படுகின்ற சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 74 | நூடில்ஸ்/இடியப்பம்/உடனடி உணவுகள் தயாரிப்பு | 450 0 | 600 0 | 1,000 0 |
| 75 | இயந்திர சாதனங்கள் மூலம் தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 450 0 | 550 0 | 800 0 |
| 76 | சீமெந்துக்கல் உற்பத்தி/விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 77 | சுண்ணாம்பு சுடும் ஆலை நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 78 | சகல மின்சார வீட்டுப்பாவனை பொருட்களின் விற்பனைகள் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 79 | டயர்/டியுப் விற்பனை அல்லது பழுதுபார்த்தல் | 400 0 | 600 0 | 1,000 0 |
| 80 | உலோக தகட்டுக்களால் ஆன பொருட்களின் உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 81 | மொத்த உற்பத்தி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 82 | எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 83 | ஊதுபத்திகள் உற்பத்தி | 450 0 | 650 0 | 1,000 0 |
| 84 | "கிறீல்" வேலைத்தளம் நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 85 | சீமெந்து பொருட்களின் உற்பத்தியும்/விற்பனையும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 86 | பித்தளைப் பொருட்களின் உற்பத்தியும்/விற்பனையும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 87 | தொலைபேசி மற்றும் தொலைபேசி கருவிகளின் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |

7-566/5

---

## காவத்தை பிரதேச சபை

*ஏதாவது கைத்தொழில் ஒன்றை நடாத்திச் செல்வதன் நிமித்தம் இடைக்கால யாப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மீது கட்டண விதிப்பு - 2010*

காவத்தை பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில், தீர்மான இலக்கம் 5 : 13 இன் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முன்மொழிவானது சபையால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

அதன்படி, ஏதாவதொரு இடைக்கால யாப்பின்கீழ் காவத்தை பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் ஏதாவதொரு கைத்தொழிலை நடாத்திச்செல்வதற்காக 2010 ஆம் ஆண்டில் காவத்தை பிரதேச சபையால் வழங்கப்பட்ட சகல அனுமதிப்பத்திரங்களும் கட்டணமொன்று அறவிடப்படுமென மேலும் அறியத்தரப்படுகின்றது.

பிரியந்த உபுல் ஹேவகே,
தலைவர்,
காவத்தை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
காவத்தை,
2009.12.04.

### முன்வைக்கப்பட்ட பிரேரணை

பிரதேச சபையினால் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால யாப்பின்கீழ் அல்லது காவத்தை பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறைவேற்று இடைக்கால யாப்பின்கீழ் காவத்தை பிரதேச சபையால் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் தொடர்பாக, 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது சரத்துடன் கூறப்பட்டுள்ள 149 ஆவது சரத்தின் படி பிரதேச சபைகளுக்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் கீழுள்ள அட்டவணையில் (1) ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழில் தொடர்பாகவும் அவ் அட்டவணையில் (11) ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட அளவிற்குரிய அனுமதிப்பத்திர கட்டணமானது விதித்து அறவிடுவதற்கு காவத்தை பிரதேச சபையானது யோசனையை முன்வைக்கின்றது.

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொடரி லக்கம் | கைத்தொழின் அல்லது வியாபாரத்தின் வகை | இடத்தின் வருட மதிப்பீட்டு பெறுமதி (ரூபா) | | |
| | | 750 க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 750 க்கு மேல் 1,500க்கு மேற்படாத சந்தர்ப்பம் | 1,500 க்கு மேற்படுகின்ற சந்தர்ப்பம் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01 | தங்குமிட வசதியளிக்குமிடம்/வாடிவீடு நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 02 | ஹோட்டல் நடாத்திச் செல்லல் | 400 0 | 600 0 | 1,000 0 |
| 03 | உணவகம்/சோறு சாப்பாட்டுக் கடை நடாத்திச் செல்லல் | 400 0 | 550 0 | 850 0 |
| 04 | சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லல் | 400 0 | 550 0 | 800 0 |
| 05 | தேனீர்/கோப்பிக் கடை நடாத்திச் செல்லல் | 400 0 | 500 0 | 750 0 |
| 06 | பசும்பால் சேகரிப்பு அல்லது விற்பனை நிலையம் நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 07 | பேக்கரி நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 08 | பசு மாடுகள் பட்டி நடாத்திச் செல்லல் | 350 0 | 550 0 | 800 0 |
| 09 | மீன் விற்பனை நிலையம் நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10 | இறைச்சி விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | ஐஸ்கிறீம்/ஐஸ்பக்கட்/யோர்கட் உற்பத்தி நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | குளிர்பான உற்பத்தி நிலையம் நடாத்திச் செல்லல் | 450 0 | 700 0 | 1,000 0 |
| 13 | சலவை நிலையம் நடாத்திச் செல்லல் | 450 0 | 750 0 | 1,000 0 |
| 14 | மாடுகள் கட்டுமிடம் நடாத்திச் செல்லல் | 350 0 | 550 0 | 800 0 |
| 15 | இறைச்சிக்காக மிருகங்கள் அறுக்குமிடம் நடாத்திச் செல்லல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16 | தலைமயிர் வெட்டுமிடம் நடாத்திச் செல்லல் (சலூன்) | 500 0 | 750 0 | 1,000 0 |

7-566/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.